# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

# O.S.No.41/2022

PW3- தேவராஜ் நாள்-13.03.2025

<u>**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**</u>

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை வாதி கேட்டு கொண்டதற்கு இணங்க சாட்சியம்அளிக்கிறேன். நான் நீதிமன்றத்திற்கு அடிக்கடி சாட்சியம் சொல்ல வருவேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கை தவிர இன்னொரு வழக்கிற்கு சாட்சியம்அளிக்க வந்துள்ளேன். ஊரில் பணம் கொடுக்கல் வாங்கலில் பிரச்சனை ஏற்பட்டு கூப்பிட்டார் நான் போய் பேசுவேன். 24.11.2015 அன்று என்ன கிழமை என்று ஞாபகமில்லை. வாதி பிரதிவாதிக்கு செட்டிக்குளத்தில் வைத்து மதியம் 3 மணிக்கு பணம் கொடுத்தார். ஈட்டுக்கடன் பத்திரம் காலக்கெடு எவ்வளவு என்று எனக்கு தெரியாது. 2019ல் பிரதிவாதி கொடுக்க வேண்டிய கடனுக்கு கால அவகாசம் வாங்கி தரசொல்லி சொன்னதற்கு நான் எழுதி எதுவும் வாங்கி கொடுக்கவில்லை. 2019க்கு பிறகு 3வருடம் கழித்து தான் வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். நான் 6 மாத காலஅவகாசம் வாங்கி கொடுத்தது எவ்வளவு தொகைக்கு என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை. ஆனால் 6 லட்சத்திற்கு வாங்கி கொடுத்தேன். ஈட்டுக்கடன் பத்திரத்தில் ரூ.100க்கு எவ்வளவு வட்டி குறிப்பிடப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்திலும் எவ்வளவு வட்டித்தொகை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. ஈட்டுக்கடன் எழுதிய சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் எனக்கு தெரியாது. பிரதிவாதி கடன் தொகை தரவில்லை என்பதற்காக வாதி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தது எனக்கு தெரியாது. ஈட்டுக்கடன் பத்திரம் பதிவு செய்யும் போது வேறு இரண்டு பேர் சாட்சி கையெழுத்துபோட்டதால் நான் சாட்சி கையெழுத்து போடவில்லை. வாதி கேட்டு கொண்டதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எந்த தேதியில் 2019ஆம் இடத்தில் 6மாத காலஅவகாசம் வாங்கி கொடுத்தேன் என்று குறிப்பிடவில்லை.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.